ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2164 - 2020 පෙබරවාරි මස 20 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.02.20
*2164 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 20 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 302 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 303 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 306 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2020, மாச்சு மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

.'ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*301-B 82009-405 (2020/02)*

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

காணி அமைச்சு

இலங்கை நில அளவைத் திணைக்களம்

**விலைமனுக் கோரல்**

பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் – 2020

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை இரண்டு வருட காலத்திற்கு வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகங்களில் விலைமனுக்கோரல்கள் 2020.03.05 ஆந் திகதி அன்று பிற்பகல் 2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் விலைமனுக்கோரல்கள் பி. ப. 2.05 மணிக்குத் திறக்கப்படும்.

| மாகாணம் | மாவட்டம் | பிரதேச நில அளவை அலுவலகம் | கேள்வி மனு ஒப்படைத்தல் | அருகில் உள்ள நகரம் | தேவைப் படும் திகதி |
|---|---|---|---|---|---|
| தென் மாகாணம் | அம்பாந் தோட்டை | திஸ்ஸ மஹாராம | மாகாண நில அளவையாளர் நாயகம் (தென் மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம், காலி. | திஸ்ஸமஹாராம நகருக்கு அருகில் | 2020.03.13 |

**பூரணப்படுத்தப்பட வேண்டிய பொதுவான தேவைப்பாடுகள் :**

அனைத்து கட்டிடங்களும் பாதுகாப்பு சுற்று மதில் அல்லது கம்பி வேலி மூலமாக பாதுகாக்கப்பட்டிருத்தல் வேண்டும். தண்ணீர்க் குழாய் வசதியினைக் கொண்டிருப்பதுடன் அழுக்குகள் மற்றும் வடிநீர் செல்வதற்கான முறையான வடிகாலமைப்பு இருத்தல் வேண்டும். தனியான நீர்மானி மற்றும் மின்மானி என்பன வேறு வேறாக பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். உரிய இடத்திற்கு அண்மித்த பிரதேசங்களில் இருந்து அதிக ஒலியை எழுப்பக்கூடிய தொழிற்சாலைகளோ அல்லது அது போன்ற வேறு ஏதாவது பட்டறைகளோ இல்லாதிருத்தல் வேண்டும். கட்டிடம் ஸ்தாபிக்கப்பட்டிருப்பது பெருந்தெருவுக்கு அண்மித்ததாக இல்லாதிருப்பின் அதற்குச் செல்வதற்கு முறையான போக்குவரத்துப் பாதை இருத்தல் அவசியமாகும். குறைந்தபட்சம் மூன்று வண்டிகள் நிறுத்தி வைக்கக்கூடிய இடவசதியும் அத்துடன் வாகனத் தரிப்பிட வசதியும் இருத்தல் வேண்டும். அதிகாரிகள் 10 பேருக்கு போதுமான அறைகள் கொண்ட இடவசதி இருத்தல் வேண்டும்.

கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை பூரணப்படுத்த வேண்டிய பொதுவான தேவையான சகல விபரங்களுடனான மனுக்கோரல்கள் அது அடங்கிய தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ''பிரதேச நில அளவை அலுவலகங்களை வாடகைக்குப் பெறுதல் (இடத்தின் பெயர்)'' எனக் குறிப்பிட்டு 2020.03.05 ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகத்திற்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படவோ அல்லது நேரடியாக கையளிக்கப்படவோ வேண்டும்.

எஸ். டீ. பீ.ஜே. தம்பேகம,
நில அளவையாளர் நாயகம்.

நில அளவையாளர் நாயகம் அலுவலகம்,
கிருல வீதி,
கொழும்பு 5,
2020.02.03.

**பிரதேச நில அளவை அலுவலகங்களுக்குக் கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் - 2020**
**விலைமனுக் கோரல் விண்ணப்பப்படிவம்**

**கட்டிட உரிமையாளரின்:**

01. முழுப்பெயர் :----.
02. முகவரி :----.
03. தொலைபேசி இலக்கம் :----.
04. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

**கட்டிடம் தொடர்பாக :**

01. எந்த பிரதேச நில அளவை அலுவலகத்திற்காக கட்டிடம் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது? ----.
02. மாதாந்த வாடகைத் தொகை ? ----.
03. ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடத்தின் முகவரி: ----.
04. உரிய நகரத்தில் இருந்து ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடத்திற்கு உரிய தூர அளவு கி. மீ : ----.
05. இடத்தின் விஸ்தீரணம் : ----.
06. கட்டிடத்தின் வர்க்க அடியளவும் அறைகளின் எண்ணிக்கை தொடர்பான விபரங்கள் :----.
07. தனியாக அவதானிக்கக் கூடிய நீர்மானி பொருத்தப்பட்டுள்ளதா? ----.
08. தனியாக அவதானிக்கக்கூடிய மின்மானி பொருத்தப்பட்டுள்ளதா? ----.
09. பாதுகாப்பு எல்லை தொடர்பான விபரம் (மதில் /கம்பி வேலி/. . . . . . ): ----.
10. நிறுத்தி வைக்கக்கூடிய வாகனங்களின் எண்ணிக்கை : ----.

மேலே என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை என்றும், வழங்கப்பட்டுள்ள தகவல்கள் தவறானவை எனத் தெரியவரும் பட்சத்தில் என்னால் அனுப்பப்பட்டுள்ள இந்த விலைமனு நில அளவையாளர் நாயகத்தினால் நிராகரிக்கப்படும் என்பதனை நான் நன்கு அறிவேன் என்றும் இத்தால் அறியத் தருகின்றேன்.

விண்ணப்பதாரியின் கையொப்பம்.

2- 440

---

## உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : Tritech Services & Solutions (Private) Limited
கம்பனியின் இலக்கம்: PV 00210827
திகதி : 2019.05.06
பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி : 238, மஹரகம ரோட், பொரலெஸ்கமுவ, மஹரகம

நிறுவன இயக்குநர்.

2019, ஒகத்து 22.

2- 409

---

### அறிவித்தல்

மெர்சன்ட் சொலூஷன்ஸ் ( பிரைவட்) லிமிட்டட் என்ற பெயர் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கம் கொண்ட கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் கீழ் ஃபைசர்வ் லங்கா ( பிரைவட்) லிமிட்டட் எனத் திருத்தம் செய்யப்பட்டு 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி முதல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கம்பனியின் முன்னைய பெயர் : மெர்சன்ட் சொலூஷன்ஸ் (பிரைவட்) லிமிட்டட்
கம்பனி இலக்கம்: பீவீ 61342
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 116/10, றொஸ்மீட் பிளேஸ், கொழும்பு 7
கம்பனியின் புதிய பெயர்: ஃபைசர்வ் லங்கா ( பிரைவட்) லிமிட்டட்
கம்பனியின் செயலாளர்கள்: சென்ட்ரல் கோபரேட் என்ட் கன்சல்டிங் சர்விஸஸ் (பிரைவேட்) லிமிடட் இல. 116/10, றொஸ்மீட் பிளேஸ், கொழும்பு-10

2- 411

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

சிங்கப்பூரில் சட்டப்பூர்வமாக (ப.சே.இல. 201204471 W) பதிவு செய்யப்பட்டுள்ள அலுவலகம் 5சீ,டோ குஹான் வீதி, (Toh Guan) கிழக்கு சிங்கப்பூர், 608828 அமைந்துள்ள

மற்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பதிவு செய்யப்பட்டுள்ள லெவல் -12, பார்க் பில்டிங், இல. 33, பார்க் வீதி, கொழும்பு -02 என்ற இடத்தில் அமைந்துள்ளதும் அதன் கிளைகள் Nippon Express ( தெற்கு ஆசியா மற்றும் ஓசினியா (Oceania) தனி. நிறுவனம் (ப.செ.இல. 201204471 W ) தனி இயக்குனர் ஆகிய சிஞ்ஜீரோ டகீசோ (Shinjiro Takezoe) ( தற்போது 11 யுனிட்டி ஸ்ரீட் # 06-20 ரொபட்சன் வொக் சிங்கப்பூர் 237995) இல் வசிக்கும் நான் 2016, யூலை மாதம் 11 ஆந் திகதி எல். குப்பான்செட்டி பிரசித்த நொத்தாரிசு சிங்கப்பூரில் சான்றுப்படுத்தப்பட்ட கொழும்பு 2, பார்க் வீதி, இல. 33, பார்க் கட்டிடம் # 1229, லெவல் -12 இல் வசிக்கும் மசாஓ உமெமொடோ ( Masao Umemoto) என்ற நபருக்கு வழங்கப்பட்ட அற்றோணி அதிகாரத்தை 2019,ஒற்றோபர் மாதம் 14 ஆந் திகதி முதல் பயனற்றதாக்கி சட்டரீதியாக இரத்துச் செய்வதாக இதன் மூலம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசிற்கும் அதன் வாழ் பொது மக்களுக்கும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிஞ்ஜீரோ டகீசோ (Shinjiro Takezoe).

2- 361

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கம்பஹா, கல்யாணி வீதி, இலக்கம் 35/ 4 ஐச் சேர்ந்த ஜீவனீ துசாரா குமாரி அமரசேகர ஆகிய நான், சட்டத்தரணி, ராஜிதா பிரசாந்தி குலதுங்க அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட மேலதிக உதவிப் பதிவாளர் நாயகத்தினால் எழுத்து மூல அதிகாரங்கள் பராமரிக்கப்படும் புத்தகத்தில் கம்பஹா பதிவாளர் அலுவலகத்தில் 2015.11.18 ஆந் திகதியன்று பதிப்பு 53, பக்கம் 4, பதிவு 26270 இல் பதிவு செய்யப்பட்ட இலக்கம் 2851 மற்றும் 2015.10.16 ஆந் திகதியுடையதும் இலக்கம் 35/4, கல்யாணி வீதி, கம்பஹா சித்ரா எலன் மென்டிஸ், ( உரிமையாளர்- தே.அ.அ.இலக்கம் 436062451V) என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

ஜீவனீ துசாரா குமாரி அமரசேகர.

2020.01.22.

2-367

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கம்பஹா, கல்யாணி வீதி, இரண்டாம் ஒழுங்கை, இலக்கம் 35/ 4 ஐச் சேர்ந்த திலினி பிரபா குமாரி அமரசேகர ஆகிய நான், சட்டத்தரணி, ராஜித பிரசாந்தி குலதுங்க அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட மேலதிக உதவிப் பதிவாளர் நாயகத் தினால் எழுத்து மூல அதிகாரங்கள் பராமரிக்கப்படும் புத்தகத்தில் கம்பஹா பதிவாளர் அலுவலகத்தில் 2015.11.18ஆந் திகதியன்று பதிப்பு 53, பக்கம் 4, பதிவு 26269 இல் பதிவு செய்யப்பட்ட இலக்கம் 2852 மற்றும் 2015.10.16 ஆந் திகதியுடையதும் இலக்கம் 35/4, கல்யாணி வீதி, கம்பஹா சித்ரா எலன் மென்டிஸ், ( உரிமையாளர்- தே.அ.அ.இலக்கம் 436062451V) என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

திலினி பிரபா குமாரி அமரசேகர.

2020, சனவரி 14.

2-368

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

வெயங்கொடை, நைய்வள, சனச நகர் , 89/37ஆம் இலக்கத்தைச் சேர்ந்தவரும் 562936643V என்ற இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையின் உரிமையாளருமாகிய இராமநாயக்க பத்திரன்னேஹெலகே சுசில் ஷாந்த ஆகிய நான், வெளிநாட்டில் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் 2017.07.12 ஆந் திகதியிடப்பட்டு பதிவாளர் நாயகத் திணைக்களத்தில் எழுத்து மூலம் அதிகாரம் பெற்றவர்கள் மற்றும் விஷேட அற்றோணித்தத்துவப் புத்தகத்தில் 30 ஆம் பாகம், 1795 ஆம் இலக்க நாட்புத்தககத்தின் 65 ஆம் இலக்கத் தாளில் பதிவு செய்யப்பட்டவாறு கூறப்பட்ட இலங்கை குடியரசின் வெயங்கொட,கும்பலொலுவ, 315/ ஏ என்ற இலக்கத்தைச் சேர்ந்தவரும் 622772833V என்ற இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையின் உரிமையாளருமாகிய இராமநாயக்க பத்திரன்னேஹெலகே நீல் பிரேமரத்ன என்பவருக்கு என்னால் வழங்கப்பட்டதுமாகிய விஷேட அற்றோணித்தத்துவமானது என்னால் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்பட்டுள்ளதெனவும் இந்த திகதி முதற்கொண்டு மேற் கூறப்பட்டுள்ள இராமநாயக்க பத்திரன்னேஹெலகே நீல் பிரேமரத்ன என்பவரினால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயற்பாட்டிற்கும் நான் பொறுப்பேற்க மாட்டேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

இராமநாயக்க பத்திரன்னேஹெலகே
சுசில் ஷாந்த.

2020, சனவரி 14.

2-384

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

புத்தளம் மாவட்டம், கடுனேரிய அஞ்சல் சேவைப் பகுதியில் பஹல கடுனேரிய, சிலாபம் வீதி, இல. 97 எனும் முகவரியில் வசிக்கும் போருதொடகே ஸ்டான்லி பிரணாந்து ஆகிய நான், கடுனேரிய "சிசில" எனும் முகவரியில் வசிக்கும் டபிள்யூ. ஐ.ஏ.ஆர். பிரணாந்து பிரசித்த நொத்தாரிசு என்பவரால் 2018.02.19 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இலக்கம் 1336 கொண்ட பத்தரமுல்லையில் அமைந்துள்ள பதிவாளர் நாயகத் திணைக்களத்தில் பிரதான அலுவலகத்தில் அற்றோணித் தத்துவப் புத்தகத்தில் தொகுதி 226, பக்கம் 29, நாட்குறிப்பு

3147 எனும் இலக்கத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள அற்றோணி தத்துவத்தில் கடுனேரிய அஞ்சல் சேவைப் பகுதியில் பஹல கடுனேரிய , இல. 97 எனும் முகவரியில் வசிக்கும் தெரேஸ் கான்தி தபரேரா என்பவரை எனது சட்டபூர்வ அற்றோணி தத்துவக்காரராக நியமித்திருந்தேன் என்பதோடு, அந்த அற்றோணித் தத்துவம் இன்று முதல் செல்லுபடியற்றதாக்கப்பட்டு வலிதற்றதாக்கப்பட்டுள்ளது என்பதை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் மக்களுக்கும் அறியத்தருகின்றேன். அதன்படி, மேலே கூறப்பட்ட அற்றோணி தத்துவத்தை பயன்படுத்திக்கொண்டு மேற்கொள்ளப்படும் அனைத்து செயற்பாடுகளும் செல்லு படியற்றவை வலுவற்றவை என இத்தால் மேலும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

போருதொடகே ஸ்டான்லி பிரணாந்து.

2-407

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

பிலான, மொரகல சந்தி, கண்கானம்கே வத்தவில் வதியும், தினுஷா ரணதுங்க ( தே.அ.அ.இல. 866453551V) ஆகிய நான், காலி, சீனகொரட்டுவ, இலக்கம் 10 இல் வதியும் முனசிங் பத்திரன பல்லியகே தீக்ஷண நவீன் மதுஷங்கவிற்கு (தே.அ.அ.இல. 873522062V) வழங்கிய பிரசித்த நொத்தாரிசு திருமதி ஜயந்தி ஹேனகொட வித்தானாச்சி மூலம் 2019.02.04 ஆந் திகதியன்று எழுதி அத்தாட்சிப்படுத்திய இலக்கம் 2042 கொண்ட அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்து இல்லாதொழித்ததாக இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் பொது மக்களுக்கும் அறிவித்துக் கொள்கின்றேன். இது முதற்கொண்டு முனசிங் பத்திரன பல்லியகே தீக்ஷன நவீன் மதுஷங்க எனது சார்பாக மேற்கொள்ளும் எந்தவொரு நடவடிக்கை அல்லது கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்பாக இருக்க மாட்டேன் என இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

தினுஷா ரணதுங்க.

2-412

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக் கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர் : ஒப்பஸ் சென்டா லங்கா (பீவீஊ) எல்ஊடி
பதிவிலக்கம்: பீவீ 00206281
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 18D, அத்துல்கோட்டே வீதி, மெயின் ஸ்ட்ரீட், பத்தரமுல்லை.
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2018.11.14

கம்பனிச் செயலாளர்.

2- 612

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

ஹக்மன, கங்கொடகம, "சமன்" இல. 15/2 எனும் முகவரியில் வசிக்கும் லொகு முனசிங்ஹகே ரோஹித சமன் குமார (தே.அ.அ.இல.840960498V) ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு நிலங்க செனெவிரத்ன என்பவரால் எழுதி அத்தாட்சிப் படுத்தப்பட்ட இல. 1813 மற்றும் 2019.08.16 ஆந் திகதிய அற்றோணித்தத்துவத்தினால், புஹுல்வெல்ல, வலகந்த, "பிரியங்கர" எனும் முகவரியில் வசிக்கும் ஹேவா கங்கானமகே சுரங்கி நதீஷானி ( தே.அ.அ.இல. 858480388V) என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவத்தை 2020.02.20 ஆந் திகதியிலிருந்து இரத்துச் செய்வதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றேன். இன்று முதல் எனது அற்றோணித் தத்துவகாரரால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு நான் பொறுப்பாளியல்ல என்றும் இத்தால் தெரிவிக்கின்றேன்.

லொகு முனசிங்ஹகே ரோஹித சமன் குமார.

2- 458

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

பத்தரமுல்லை, தலங்கம வடக்கு, முவன்ஹெலவத்த, இல. 648/12 ஐச் சேர்ந்த (தற்போது No.2,Sunkist way, Wallington, SM6 9LQ United Kingdom) என்னும் முகவரியில் குடியிருக்கும் ரோஹினீ சந்திரலதா வீரசிங்ஹ அல்லது நவசிவ முதியன்சேலாகே ரோஹினீ சந்திரலதா வீரசிங்ஹ ஆகிய நான், கம்பஹா பிரசித்த நொத்தாரிசு மற்றும் சட்டத்தரணி எம். வீ. ஹெட்டிகே என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் அற்றோணித்தத்துவப் புத்தகத்தில் 222 ஆம் தொகுதி இருமடித்தாளில் 606 ஆம் நாளேட்டு இலக்கத்தின் கீழ் 2018.01.11 ஆந் திகதி செய்யப்பட்டுள்ள அற்றோணித்தத்துவத்தினால் ஸ்ரீ நவலோக விஹாரய, நவலோகபுர, சேதவத்த என்னும் முகவரியில் குடியிருக்கும் வண. பன்னல ஞானாலோக தேரர் என்பவரை எனது அற்றோணித்தத்துவகாரராக நியமித்ததை இரத்துச் செய்வதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

இன்று முதல் குறிப்பிட்ட எனது அற்றோணித்தத்துவகாரரால் வண. பன்னல ஞானாலோக தேரர் மேற்கொள்ளும் ஏதேனும் நடவடிக்கைக்கு நான் பொறுப்பாளியல்ல என்றும் இத்தால் தெரிவிக்கின்றேன்.

ரோஹினீ சந்திரலதா வீரசிங்ஹ
அல்லது நவசிவ முதியன்சேலாகே
ரோஹினீ சந்திரலதா வீரசிங்ஹ.

2- 459

# ஏல விற்பனைகள்

**ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ - பகிரங்க ஏல விற்பனை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ்*

**ஏலவிற்பனை அறிவித்தல்**

**ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் கென்டி கலர் கோன் (பிரைவெட்) லிமிட்டெட் கடனாளியாகவும் சமரகோன் முதியன்சேலாகே கும்புரேகெதர பிரசன்ன மங்கல சமரகோன் மற்றும் சமரகோன் முதியன்சேலாகே கும்புரேகெதர அசேல சஞ்சீவ சமரகோன் ஆகியோர் கடப்பாடுடையதாக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட கீழ்விபரிக்கப்படும் ஆதனங்கள் அமைந்துள்ள அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.**

***1 ஆம் விற்பனை***

*2020.03.16 ஆந் திகதி பி.ப. 1.30 மணிக்கு*

**ஆதனத்தின் விபரம்.-**

*மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், குண்டசாலை பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் குண்டசாலை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட 719, கோனவல தெற்கு கிராம அலுவலர் பிரிவில் கோனவல கிராமத்தில் அமைந்துள்ள வெலிகொடபிட்டியே தேவாலேகாவஹேன தற்போது தோட்டம் மற்றும்வெலிகொடபிட்டியே சியம்பலாகஹமுலஹேன தற்போது தோட்டம் எனும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் J. அமரசேன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1025 ஆம் இலக்க 2007.10.14 ஆந் திகதிய வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 4 என அடையாளமிடப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டு.*

*அண்மையில் செய்யப்பட்ட அளவையின் பிரகாரம் மேற்கூறிய கோனவல கிராமத்தில் அமைந்துள்ள வெலிகொடபிட்டியே தேவாலேகாவஹேன தற்போது தோட்டம் மற்றும் வெலிகொடபிட்டியே சியம்பலாகஹமுலஹேன தற்போது தோட்டம் எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் T.B.S. சங்கரன்தெனிய என்பவரினால் தயாரிக்கப்பட்ட 8663ஆம் இலக்க 2014.08.26 ஆந் திகதிய வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 4 என அடையாளமிடப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்களும் மற்றும் சகலதுமாகும். இது 11.15 பேர்ச் பரப்பளவானது.*

***2 ஆம் விற்பனை***

*2020.03.16 ஆந் திகதி மு.ப.10.45 மணிக்கு*

**ஆதனத்தின் விபரம்.-**

*மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், குண்டசாலை பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் குண்டசாலை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட 719, கோனவல தெற்கு கிராம அலுவலர் பிரிவில் கோனவல கிராமத்தில் அமைந்துள்ள வெலிகொட பிட்டியே தேவாலேகாவஹேன தற்போது தோட்டம் மற்றும் வெலிகொடபிட்டியே சியம்பலாகஹ முல ஹேன தற்போது தோட்டம் எனும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் J. அமரசேன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1025 ஆம் இலக்க 2007.10.14 ஆந் திகதிய வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 5 என அடையாளமிடப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டு.*

*அண்மையில் செய்யப்பட்ட அளவையின் பிரகாரம் மேற்கூறிய கோனவல கிராமத்தில் அமைந்துள்ள வெலிகொடபிட்டியே தேவாலேகாவஹேன தற்போது தோட்டம் மற்றும் வெலிகொடபிட்டியே சியம்பலாகஹமுலஹேன தற்போது தோட்டம் எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் T.B.S. சங்கரன் தெனிய என்பவரினால் தயாரிக்கப்பட்ட 8663ஆம் இலக்க 2014.08.26 ஆந் திகதிய வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 5 என அடையாளமிடப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்களும் மற்றும் சகலதுமாகும். இது 01 றூட், 1.12 பேர்ச் பரப்பளவானது.*

*உரிமம் பெற்ற நிலஅளவையாளர் J. அமரசேன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1025 ஆம் இலக்க 2007.10.14 ஆந் திகதிய வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 3 என அடையாளமிடப்பட்ட பாதையின் மீதும் ஊடாகவும் பாதை உரிமை உண்டு.*

**ஆதனத்தை வந்தடைதல்:** *கண்டி நகரத்திலிருந்து கண்டி மஹியங்கனை பாதையில் சுமார் 15 கி.மீ. தூரம் கும்புக்கந்துர பாதை சந்தி வரை வந்து வலது பக்கமாகத் திரும்பி கும்புக்கந்துர பாதைக்குப் பிரவேசித்து அப்பாதையில் சுமார் 15 மீற்றர் தூரம் சென்றால் இப்பாதையின் எல்லையில் வலது பக்கத்தில் இவ்வாதனம் அமைந்துள்ளது.*

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.-** *2019.07.19 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2019.07.31 ஆந் திகதிய "லக்பிம", "டேலி மிரர் " மற்றும் "தினக்குரல் " ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

**கொடுப்பனவு *முறை*.-** விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க் காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும்:-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;

(2) பிரதேச சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) ;

(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/2 % (நூற்றுக்கு இரண்டரை);

(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;

(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூ. 1500;

(6) நொத்தாரிஸ் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் ரூ. 2000.

கொள்முதலில் மிகுதி 90% இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்படவிருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு**.- "சிரேஷ்ட முகாமையாளர் (கடன் அறவிடுதல்), ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ, இல. 479, ரீ. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10" தொலைபேசி இல. : 011-2661836, 011- 2661835, 011- 2661826.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம்
பெற்ற ஏல விற்பனையாளர்,

இல. 369/1,
துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை, மாவில்மட, கண்டி
தொலைபேசி : 081-2310595/071-8446374/071-4962449

2- 442

---

## ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல். சீ – ஹெட்டிபொல கிளை

(முன்னர் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி )

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனைஅறிவித்தல்

### விலைமதிப்புமிக்க சொத்து ஏலவிற்பனை

அனுமதிபெற்ற நிலஅளவையாளர் இரந்ததிஸ்ஸ கொடபகே என்பவரால் தயாரிக்கப்பட்டு 2005.05.08 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இலக்கம் 1540A/ 2005 இல் லொட் இலக்கம் 02 இல் சகலதும் பிரிக்கப்பட்டு குறிப்பிடப்பட்ட பூர்டன் தோட்டம் எனும் தம்பியகம வத்த காணி அக் காணியிலிருந்து கட்டிடங்கள் மற்றும் அனைத்தும் அடங்களாக வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், தெவ்மெதிஹத்பத்துவ கிரதலன கோரளே, பண்டுவஸ்நுவர பிரதேச சபை எல்லைகக்குட்பட்ட, பண்டுவஸ்நுவர பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பண்டுவஸ்நுவர மேற்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட , தென்கொட கிராம அலுவலர் பிரிவின் தம்பியகம கிராமத்தில் அமைந்துள்ள லொட் இலக்கம் 01 எனும் காணி.

வடகிழக்கு: திட்ட எண் 1540A /2005 இன் லொட் இலக்கம் 01 மற்றும் ஹெட்டிபொலவிலிருந்து கோட்டாம்பபிட்டி வரை பிரதேச சபா சாலை-டோரதியகேதரா சாலை.

தென்கிழக்கு: ஆர். எம். தயா ஸ்ரியானிக்குச் சொந்தமான தம்பியாகம தோட்டம்.
தென்மேற்கு: ஏ. வென்டபூர்டனுக்குச் சொந்தமான பூர்டன் தோட்டம் மற்றும் 1540A / 2005 திட்டத்தின் லொட் எண் 03 மூலம்.
வடமேற்கு: 1540A/2005 திட்டத்தின் லொட் எண் 01 மூலமாகவும் சூழப்பட்டுள்ளது.

குருநாகல் பிரசித்த நொத்தாரிசு டீ. ஆர். பீ. கால்லகே அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2018, மே மாதம் 25ஆந் திகதியிடப்பட்ட 3924 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் கார்திவசம் பாலகே அஜித் குமார ஆரியதாச என்பவரால் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீக்கு அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து.

**ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. யினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி, 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 12 ஆந் திகதி வியாழக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும் என்பதை அறியத்தருகின்றேன்**.

**பிரவேசம்**.-ஹெட்டிபொல நகர மத்தியிலிருந்து வாரியபொலசாலையில் சுமார் 2.25 கிலோ மீற்றர் கோட்டாம்பபிட்டி சந்தி வரை சென்று வலதுபுறமாக நாரம்மல சாலைக்குத் திரும்பிச் சென்று அவ் வீதியில் சுமார் 1.1 கி.மீ. தொலைவிலுள்ள ஸ்ரீ சுனந்தாராம மாவத்தையில் வலதுபுறமாக சுமார் 1.75 கி.மீ. தூரம் பயணிக்கும் போது சொத்து இடதுபுறத்தில் அமைந்துள்ளது.

**தீர்மான அறிவிப்புகளுக்காக**.- 2019, நவெம்பர் மாதம் 15 ஆந் திகதியிட்ட அரசாங்க வர்த்தமானி மற்றும் 2019, நவெம்பர் மாதம் 19 ஆந் திகதிய "லக்பிம", "டெயிலி மிரர்" மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை**: ஏல விற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர் விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப்பணமாகச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% ( பத்து சதவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்);
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5 % (இரண்டரை சதவீதம் ) மற்றும் அவற்றுக்காக விதிக்கப்படும் சகல வரிகளும்;
(4) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூவுவோர் கட்டணம் 500 ரூபா ;
(5) விற்பனைச் செலவுகள் மற்றும் பிற கட்டணங்கள் (இருப்பின்);
(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரை வரி.

கொள்முதல் விலையின் மீகுதி 90% விற்பனையின் பின்னர்

*30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள் வரிகள், அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் சேர்த்து செலுத்தப்படல் வேண்டும்.*

**உரித்து உறுதிகள் தொடர்பான மேலதிக தகவல்களை கீழ்க்காணும் அதிகாரியுடன் தொடர்பு கொண்டு பெறமுடியும்.**- *"உதவிப் பொது முகாமையாளர் ( அறவிடுதல்), ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ, இல.479, ரீ. பி. ஜயா மாவத்தை, கொழும்பு 10" உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. : 011-2661816/ தொலைநகல்: 011- 2661835.*

*டல்லஸ் கெலாட்,*
*அங்கீகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர்.*

*இல. 146/3,*
*கல்தேரா கார்டின்ஸ்,*
*கீழ் துட்டுகெமுனு தெரு,*
*கொஹுவலை.*
*தொலைபேசி இல.: 011- 4367467, 011-4367111.*

*மின்னஞ்சல்* : aucslk@gmail.com

*2- 449*